STATE LEGISLATURE MADRAS
2 1 JAN 1965

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Friday, 23rd October 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

புதிய பள்ளிகள் நிறுவுதல்

* 66 கேள்வி—திரு. சோ. ஆறுமுகம்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிராமங்களில் நிறுவப்படும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் மக்கள் தொகையின் அடிப்படையிலா அல்லது ஒரு பள்ளிக்கும், புதிதாக ஏற்படுத்தப்படும் பள்ளிக்கும் இடையில் உள்ள தூரத்தின் அடிப்படையிலா?

(இ) இரண்டு பஞ்சாயத்துக்கள் இணையும் எல்லையில் உள்ள கிராமங்களில் ஒரு பஞ்சாயத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் கட்டி விட்டால் மற்றொரு பஞ்சாயத்து பள்ளிக் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கப்படுகிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Both the factors are taken into consideration.

(*b*) The criterion for the opening of a school is the need for a school locality in the particular locality and not whether the locality falls within one panchayat or the other.

திரு. எம். எஸ். செல்வராஜன்: தற்போது புதிதாக ஆரம்பப் பள்ளிகள் திறப்பதற்கு மாகாணக் கல்வி அதிகாரிதான் அனுமதி கொடுக்க வேண்டுமென்று விதி இருக்கிறதா? தாமதத்தைத் தவிர்ப் பதற்குக் கூடுமான வரையில், டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அளவிலே அதிகாரம் வழங்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: 300 ஜனத்தொகைக்கு மேற் பட்ட கிராமமாயிருந்து, வேறு அந்த இடத்திலே பள்ளி இல்லை என்றால், கல்வி அதிகாரியின் அனுமதியில்லாமலேயே வைத்துக் கொள்ளலாம். ஒன்றுக்கு மேற்பட்ட பள்ளிகள் வைக்கும் பொழுதுதான், கல்வி அதிகாரி பார்த்து அது அவசியமா என்று பரிசிலனை செய்து, அவருடைய அனுமதி பெறவேண்டியிருக்கிறது.

திரு. மு. சண்முகம்: ஆரம்பப் பள்ளிகளை ஏற்படுத்தும் பொழுது, மக்கள் தொகையை மட்டில் கணக்கில் எடுத்துக் கொண்டு தூரத்தைக் கணக்கிடாமல் பள்ளிகளை நிறுவுவதை அரசாங்கம் கவனிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு விடையளித்தது போல், மக்கள் தொகையை மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு பள்ளிகளை நிர்ணயிப்பது சரியாக இருக்காது என்பது அரசாங்கத்தின் கருத்து.

புலவர் கா. கோவிந்தன் : பெரிய ஊராட்சி மன்றங்களிலே இப்படி ஒரு மைல் இடைவெளியைப் பார்க்காமல், மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்து பள்ளிகள் வைக்கிறார்கள். ஆனால் சிறு கிராமங்களில் படிக்கக்கூடிய அளவுக்கு மாணவர்கள் இருந்தும், இடைவெளி ஒரு மைல் இல்லை என்ற காரணத்திற்காக பள்ளிகள் திறப்பது நிறுத்தப்பட்டிருக்கிறது. பிள்ளைகள் இருந்தால் அங்கே பள்ளிக்கூடம் திறப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு எம். பக்தவத்சலம் : இதெல்லாம் கல்வி அதிகாரியின் கவனத்தில் இருக்கிறது. இதையெல்லாம் பார்த்துத்தான் அனுமதி கொடுக்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : செங்கோட்டை தாலூகாவைப் பொறுத்தவரையில் எலிமெண்டரி எஜுகேஷன் சர்க்கார் பொறுப்பில் இருந்துகொண்டிருக்கிறது. அடிக்கடி சென்னைக்கு வந்து, பள்ளிகள் திறப்பதற்கோ அல்லது திட்டங்கள் வகுப்பதற்கோ, டி.பி.ஐ. லெவலில் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. பிளாக் லெவலிலே இருக்கிற மாதிரி, பிளாக்கின் நிர்வாகத்திற்கே இதை விடுவதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : செங்கோட்டைப் பகுதியிலிருந்து கூட, சென்னைக்கு வரவேண்டிய அவசியம் இல்லை. ஸ்தல அதிகாரிகளிடம் கலந்து பேசி, வேண்டியதை ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

திரு. மு. பொ. வடிவேல் : இப்பொழுது ஜனத்தொகை 300 இருந்து 30 பிள்ளைகள் இருந்தால் டி.இ.ஓ. விடம் பெர்மிஷன் வாங்க வேண்டியிருக்கிறது. அதை மாற்றி பஞ்சாயத்து யூனியனுக்கே விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு கூறியதுபோல், ஜனத்தொகை 300-க்கு மேற்பட்ட கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடம் கூட இல்லை என்றால் யார் அனுமதியும் வேண்டாம். பஞ்சாயத்து யூனியனே பள்ளிக்கூடம் வைத்துக்கொள்ளலாம்.

திரு. எஸ். முருகையன் : ஜனத்தொகை 300-க்கு மேற்பட்ட கிராமங்களில்கூட, சர்க்கார் உத்தரவுப்படி கல்வி அதிகாரியின் அனுமதியைப் பெறவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்கள் அப்படி இல்லை என்று சொல்லுகிறார்கள். இதிலே எது சரி என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் சொன்னபடி 300-க்கு மேற்பட்ட கிராமமாயிருந்து, வேறு பள்ளிக்கூடம் இல்லாமல் இருந்து, கல்வி அதிகாரியின் அனுமதியைப் பெற வேண்டுமென்று

23rd October 1964]

சொல்லியிருந்தால், அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்தைப் பற்றியிருந்தால், அதை எனக்குத் தெரிவித்தால் மேற்கொண்டு கவனம் செலுத்தப்படும்.

புதிய உயர்நிலைப்பள்ளிகள்

*67 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64 பள்ளி ஆண்டில் எத்தனை உயர்நிலைப்பள்ளிகள் திறக்கப்பட்டன?

(இ) இதில் (1) தனியார் (2) அரசினர் (3) மாவட்டக்கழகம் நிர்வாகத்தின் கீழ் உள்ளவை எத்தனை?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 190.

(இ) (1) 46.

(2) 4.

(3) 132.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போது ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களை நிர்வகிப்பதற்குத் தனியாக அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். ஜில்லா போர்டு அங்கம் நடைமுறையில் இல்லாமல் இருப்பதால் போர்டு பாடசாலை என்று பெயரிட்டு அதைத் தனியாக வைப்பதற்குப் பதிலாக சர்க்காரே போர்டு பள்ளிகளை எடுத்து நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது ஒரு தனி 'கேட்டகரி'யாக இருக்கிறது. சர்க்காரே நடத்துகிற பள்ளிகள் சில. பழைய ஜில்லா போர்டு வைத்த பள்ளிகளை சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் பள்ளிகள் அந்த வகையிலே புதிதாகத் திறக்கப்படுகின்றன. சர்க்கார் பள்ளிகளாகவே இவை செயல்படவேண்டுமென்று சொன்னால் மேலும் பரிசீலனை செய்து அதற்குப் பிறகு கவனிக்கப்படும்.

ஆசிரியர்-மாணவர் விகிதாசாரம்

*68 **கேள்வி.—திரு. டி. கடம்பவனசுந்தரம் : திரு. மீ. கலியாணசுந்தரம் : திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இப்போது அமலிலிருக்கும் ஆசிரியர்-மாணவர் விகிதாசாரத்தின் காரணமாய் பல பள்ளிகளில் இரண்டு மூன்று வகுப்பு ஒரே **ஆசிரியர் போதிக்க** வேண்டிய நிலைமையும் 60, 70 மாணவர்களை ஒரே ஆசிரியர் பார்த்துக் கொள்ள வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருப்பது சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா?